பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 27 புதன்கிழமை (11-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 212

## ★ செப்ரெம்பர் 7வரை பாராளுமன்றம் ஒத்திவைப்பு
## ★ ஆகஸ்ட் 21ல் சர்வஜன வாக்கெடுப்பு
# ஜனாதிபதியின் அதிரடி அறிவிப்பு
# கட்சித் தலைவர்கள் ஏமாற்றம்!

### வர்த்தமானி அறிவிப்பு நேற்று நள்ளிரவு வெளியானது

(விசேட நிருபர்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனக்குரிய விசேட அதிகாரங்களைப் பயன் படுத்தி பாராளுமன்றக் கூட்டத் தொடரை செப்ரெம்பர்மாதம் **7 ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு** ஒத்திவைத்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்புச் சீர் திருத்தம் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பை **ஆகஸ்ட் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை** நடத்தவும் தீர்மானித்துள்ளார்.

இவை தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று நள்ளிரவு ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

அரசியல் தலைவர்கள், ஆய்வாளர்கள், விமர்சகர்கள், இராஜதந்திரிகள்யாரும் எதிர் பார்த்திராதவகையில் ஜனாதிபதி சந்திரிகா இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளாரென உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் அலவி மௌலானா நேற்று நள்ளிரவுக்குப்பின் வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு 115 எதிர் அணிஎம்பிக்கள் ஒப்பமிட்டபோதிலும் பாராளுமன்றம் ஒத்திவைத்திருப்பதனால் அது தேவையற்றதொன்றாகிவிட்டதென அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். பிரபலகல்லூரிகளில் பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழகம் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டதையடுத்து யாழ்நகரில்இயங்கும் பிரபலகல்லூரிகளைச் சுற்றி நேற்று பொலிஸ்பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

யாழ்பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் பாடசாலைக்குப் பரவுவதை தடுக்கவே இப்பாதுகாப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. (ந)

## ஆள்மாறி சுட்டதில் கடற்படைவீரர்பலி

(வவுனியா)

வவுனியா இரணை இலுப்பைகுளம் முன்னணிகாவலரண் பகுதியில்நேற்றுமுன் தினம் விமானப்படைவீரர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டிற்கு பலியானதாக பாதுகாப்புப் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெவ்வேறு பகுதிகளில் பதுங்கியிருந்த படையினர் ஆள்அறியாது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலேயே மேற்படி படைவீரர்பலியானதாகத் தெரியவந்துள்ளது. (உ-7)

## அமைச்சரவையின் அவசர கூட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை இன்று காலை சந்திரிக்காதலைமையி அவசரமாகக்கூடவுள்ளது (வ)

## மாணவர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் யாழ். பல்கலைக் கழகத்திற்கு (2001-2002) கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 608 மாணவர்களின் விபரங்கள் பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழுவினால் யாழ் பல்கலைகழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

மாணவர்களின் பெயர் விபரங்கள் நாளை வெளிவரும்.

## ஒருவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பிரதேசத் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களில் மேலும் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

[8ம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி- பிரதியமைச்சர்கள் கருத்துமுரண்பாடு; அரசிற்குள் பிளவு

(கொழும்பு)

ஜனாதிபதிசந்திரிகாவுக்கும் பிரதியமைச்சர்களுக்குமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்புஎதுவித முடிவும் எட்டப்படாத நிலையில் முடிவுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்கூட்டியே தேர்தல் ஒன்றைச் சந்திக்க விரும்பவில்லையென பிரதிஅமைச்சர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியும் ஜனாதிபதி எதுவித முடிவும் தெரிவிக்காததால் பிரதி அமைச்சர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கும் மகஜர் ஒன்றில் பிரதிஅமைச்சர்கள் ஒப்பமிட மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால்ஜனாதிபதிபெரும்

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை ராணுவத்திற்கு வேண்டிய உதவி வழங்க அமெரிக்கா தயார்

### அமெரிக்க தளபதி அட்மிரல் டெனிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஒருமைப்பாட்டிற்காகப் போராடிவரும் இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்கா உதவி வழங்கத் தயாராக இருப்பதாக கொழும்பிற்கு விஜயம் செய்திருந்த அமெரிக்கா பசுபிக் பிராந்திய படைகளின் பிரதமர் தளபதி அட்மிரல் டெனிஸ் கஸ்ரர் பிளையர்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

திவ்வியனை விடுதலை செய்யக்கோரி

## கிழக்கு பல்கலை மாணவர் பகிஷ்கரிப்பில் குதிப்பு

[மட்டக்களப்பு]

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன் திவ்வியனை உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் தமிழ் மாணவர்கள் மீதான அடக்கு முறைகள் நிறுத்தப்பட வேண்டும் ஆகியகோரிக்கைகளைமுன் வைத்து கிழக்குப்பல்கலைக் கழகத்தின் அனைத்து பீட மாணவர்களும்நேற்று தமது விரிவுரைகளை பகிஷ்கரித்ததுடன் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை எந்தவித விட்டுக் கொடுப்பனவுகளுக்கும் இடமின்றி தமது போராட்டம் தொடருமெனவும் அவர்கள்மேலும் தெரிவித்துள்ளார்கள் (ந-8)

ஐக்கிய தேசியக்கட்சி முன்வைத்த

## ஐந்து ஆணைக் குழுக்களில் 3 குழுவை அமைக்க அரசு தயார்

(கொழும்பு)

நாட்டில் தற்போதுஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்கும் பொறுப்பு எதிர்க்கட்சிகளிடம் இருப்பதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கும் பலம் அரசிடம் உண்டு என்று தெரிவித்துள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா சமாதானத்திற்கான அனைத்து வழிகளையும் திறந்து வைத்துள்ளதாகவும், சமாதானம் தொடர்பாக எதிர்க்கட்சியே இனிமேல் முடிவுசெய்யவேண்டுமென்றும் கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில் தேசிய அரசொன்றைஅமைக்கவும், ஐக்கியதேசியக் கட்சி தெரிவித்துள்ள ஐந்து ஆணைக்குழுக்களில் மூன்று குழுக்கள் அமைக்க தாம்தயாராக இருப்பதாகவும் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

கோவிலாக்கண்டி கைதடியைச் சேர்ந்த சபாபதி பஞ்சாட்சரம் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இ.091027163)07.07 2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(3319


## தடுப்புமுகாம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாம் சென்று கைதிகளைப் பார்வையிடவுள்ளார். [உ-10]


University Of Jaffna

**Important Notice**

A Meeting of Deans of all the Faculties, and the Academic and Admi-nistrative heads Willbe held on 11. 7. 2001, Wednesday at 10 30 AM in the Board Room of the University please be pre-sent.

Prof.
P. Balasundarampillai
Vice– Chancellor
10. 7. 2001

(C/ 2198)


# யாழ் குடாநாட்டில் வான்தாக்குதல் தொடரும்

## படைத்தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் விமானத்தாக்குதல்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும், தற்போது குடாநாட்டிற்குள்ளும் அதற்கு வெளியேயும் வான் வழிக் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாகவும்,

மீண்டும் எவ்வேளையிலும் தாக்குதல்கள் ஆரம்பிக்கப் படலாம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதான முயற்சிகள் தேக்கமடைந்த நிலையில் விடுதலைப் புலிகளின் நிலையங்கள் மீது இவ்வாறான தாக்குதல் நடவடிக்கை நிலைமையை மேலும் மோசமாக்கி விடுமென இந்தியா, அமெரிக்கா முதலிய நாடுகள்கூடும் கண்டனத்தையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ள நிலையில்,

இடைநிறுத்தப்பட்ட தமது வான் தாக்குதல்கள் சர்வதேச சமூகமே எதிர்த்தாலும் தொடரும் என பாதுகாப்பு படை வட்டாரங்கள் கண்டிப்பான அறிவித்தலை விடுத்துள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் மே மாதம் குடாநாட்டைக் கைப்பற்ற புலிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததால் மீண்டுமொரு முறை குடாநாட்டின் மீது தாக்குதலொன்றைத் தொடுக்க புலிகள் முற்பட்டு வருகிறார்கள்.

இதனை முறியடிக்கும் வகையிலேயே இவ்வாறான வான் தாக்குதல்கள் நடத்தப் பட்டதாகவும்.

இறைமையுள்ள ஒரு நாடு தனது ஆட்புல ஒருமைப்பாட்டைப் பேண இவ்வாறான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சகம் கடந்த சனியன்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## வேலிகள் அழிப்பு

(மந்திகை)

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயப் பகுதியில் இருந்து, வண்ணாத்திப் பாலம் வரையான பகுதிகளில் உள்ள வீட்டு வேலிகள் படையினரால் அகற்றப்பட்டு வருகின்றன. (உ-23)

## பரீட்சைகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும் இவ்வாண்டுக்குரிய (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இந்து நாகரிக இந்து சமய பரீட்சைகள் நாளை ஆரம்பமாகின்றன.

# மாணவன் திவ்வியன் விடுதலை பெற--

னர் வீட்டிற்குச் சென்று விட்டு திரும்பிக்கொண்டிருந்த சமயம் இணுவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட அவ்விடத்திலேயே மிகவும் மோசமாக தாக்கப்பட்டு பின் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தமது கைது நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காகவும் எமது யாழ். பல்கலைக்கழக சமூகம் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கொச்சைப் படுத்துவதற்காகவும் அவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாக செய்தி ஊடகங்கள் ஊடாகப் பிரச்சாரப் படுத்தி வருகின்றது

நேற்று முன்தினம் 9-7-2001 துணைவேந்தர் அவர்களும் எமது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலுவைச் சந்தித்த போது திவ்வியனிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை எனவும் அவரிடமிருந்து எந்த ஆயுதங்களையும் தாம் கைப்பற்றவில்லை எனவும் தெரிவித்திருந்தார் ஆகவே உண்மையில் தாம் நினைத்த குற்றச்சாட்டை பிரச்சாரப் படுத்தி வருவதுடன் திவ்வியனை மோசமாகத் தாக்கிச் சித்திரவதைக்குட்படுத்தி துப்பாக்கி முனையில் தாம் நினைத்த குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ள வைக்க முற்பட்டுவருகின்றது.

திவ்வியனிடமிருந்து வாகனம் ஒன்றும், போட்டோப் பிரதி இயந்திரம், மின்பிறப்பாக்கி, கணனி, பிறின்ரர், போன்றவையும் கைப்பற்றப்பட்டதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது உண்மையில் இந்த விடயத்தில் பரமேஸ்வராச் சந்திக் குறியில்முன்பு "City தொலைத் தொடர்பு நிலையம்" நடாத்திவந்த அந் நிறுவனத்தின் உரிமையாளர் சக தொழில் நிறுவன உரிமையாளருடன் ஏற்பட்ட வியாபாரப் போட்டி காரணமாகக் காரணமின்றி புலிகளுடன் தொடர்புடையவர் எனப் பொய்க்குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்

அவர் தனது வியாபாரஸ்தலத்தில் வைத்துப் பயன் படுத்திய வாகனம் கணனி, பிறின்ரர், போட்டோப் பிரதி இயந்திரம் மின் பிறப்பாக்கி என்பன இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டது இதனை இராணுவத்தினர் திரிவுபடுத்தி திவ்வியனிடம் இருந்துமீட்டதாகபிரச்சாரப் படுத்தி வருகிறது

எமது மாணவப் பிரதிநிதிகள் திவ்வியனைக் காங்கேசன் துறைத் தடுப்பு முகாமில் சந்தித்தபோது திவ்வியன் தாக்கப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு தான் அணிந்திருந்த ரீசேட்டை கைகளை உயர்த்தி கழற்ற முடியாதவராக காணப் பட்டதனை நேரில் அவதானித்துள்ளன

தற்போது எம் மக்களின் துன்பத்திற்காக குரல் கொடுத்துசிறையாகம் இருக்கும் சகமாணவனின் விடுதலைக்காக யாழ் பல்கலைக்கழகம் கடந்த புதன்கிழமை முதல் மாணவர்களால மூடப்பட்டுள்ளது இதனைக் கல்வி அமைச்சு இன்று மீண்டும் மூடியுள்ளது பகிஷ்கரிப்புப் போராட்டத்தினை கைவிட்டால் பல்கலைக்கழகம் மீண்டும் இயங்க அனுமதிக்கப்படும் எனத் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாடு அரசகட்டுப்பாட்டின்கீழ் வந்தபின்னர் மனிதஉரிமைக்காககுரல் கொடுத்து ஓரளவிற்கேனும் மக்களின் நலன்களைப் பாதுகாத்து வருகின்ற அமைப்பு யாழ்பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம் அவ் உரிமைக்காக குரல் கொடுத்து வந்த ஓர் மாணவனின் விடுதலைக்கான பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் நாம் பின்வாங்குவதென்பது நடைமுறை சாத்தியமற்றது ஏனெனில் குடாநாட்டில் வாழும் எம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியமக்களின் வாழ்வு இளைஞர்களின் உயிர்கள் பெண்களின் கௌரவம் ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் இருப்பு என்பனவற்றை கேள்விக்குறியாக்கும் ஓர் அநாதரவான நிலையை இப்போராட்டத்தைக் கைவிடுவதன் மூலம் ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை எனவே நாம் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழவிரும்பினால் பல்கலைக்கழகம் இன்று எடுத்திருக்கும் முடிவிற்குச் சார்பாகயாழ்ப்பாண சமூகம் அணிதிரளவேண்டும். பாடசாலைகளைத் தொடர்ச்சியாகப் பகிஷ்கரித்தும் அலுவலகங்களைப் பகிஷ்கரித்தும் எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுகின்றோம். தவறுகின்றபட்சத்தில் திவ்வியன் மட்டுமல்ல இன்னும் பல ஆயிரம் இளைஞர் யுவதிகள் கைதாகிப் படுகொலை செய்யப்படும் அவலநிலை உருவாகும் அந்நிலை உருவாகிய பின் பறிபோன உறவுகளின் உயிர்களைப்பற்றி சீரழிந்து போன பெண்களின் கௌரவத்தைப்பற்றி சிந்திப்பது கண்கெட்ட பின்பு சூரியநமஸ்காரம் செய்வதுபோன்றதே. அன்புக்குரிய தமிழ்மக்களே சிந்தியுங்கள் தமிழ் மக்களுக்கான எமது அர்ப்பணிப்புத் தொடரவேண்டுமாயின் எம்மோடு அணிதிரளுங்கள்.


# இலங்கை வங்கி

**யாழ்ப்பாணம்**

ரண்சுரெக்தும் சடன்சேவை [தங்கநகை கடன் சேவை]

அவசரத் தேவைகளின் போது உதவ, சினேகபூர்வமான சேவை தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- ☐ தேவைகளை இனங்கண்டு துரிதசேவை!
- ☐ கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இரகசியம் பேணல்!
- ☐ உங்கள் தங்க நகைகளுக்குக் கூடுதல் பாதுகாப்பு!
- ☐ 22 கரட் தரமுடைய தங்கநகையின் பவுண் ஒன்றுக்கு ரூ 4000/= வரை கடன் பெறும் வசதி!
- ☐ இவ்விடயத்திற்கென ஒதுக்கப்பட்ட விஷேட அறையினுள் கொடுக்கல் வாங்கல்கள்!
- ☐ இலங்கையில் காணப்படும் ஆகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களைப் பெறுவதற்கு எங்களது வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு!

வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவில் மாற்றும் சேவையும் நடைபெறுகின்றது.

மேலதிக விவரங்களுக்கு
பிரதான முகாமையாளரைச் சந்தியுங்கள்

# இலங்கை வங்கி

மேற்றாக்கிளை,
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(C-2194)



உ
சிவமயம்

சைவபரிபாலனசபை - யாழ்ப்பாணம்

## தேர்வுத்திகதி மாற்றம்

11 07 2001ல் நடைபெறவிருந்த இந்து நாகரிக, இந்து சமய பாடத் தேர்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் 12 07 2001 முதல் 13 07. 2001 வரை நடைபெறும் என்பதனை இதனால் அறியத் தருகின்றோம்.

வ. கந்தசாமி
கௌரவ தேர்வுச் செயலர்

(3321)



VEMBADI GIRLS' HIGH SCHOOL
OLD GIRLS' ASSOCIATION

## ANNUAL GENERAL MEETING

We are pleased to inform the Old Vembadians that the Annual General Meeting of the Old Girls' Association will be held on 12th July 2001 at 3.00 p. m. at the Mable Thambiah Hall.

All are requested to be present for the Meeting.

Date : 10/07/2001.

Secretary,
Old Girls' Association

[C-2191]

### பூசா தடுப்பு முகாமில்
## புலிச்சந்தேக நபர் என்ற போர்வையில்
# 164 தமிழர்கள் தொடர்ந்தும் தடுத்து வைப்பு

(கொழும்பு)

பூசா தடுப்பு முகாமில், புலிச்சந்தேக நபர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு நாசகார குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 164 தமிழ்க் கைதிகள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் விசாரணைகள் ஏதுமின்றி தொடர்ந்தும்தடுத்துவைக்கப் பட்டிருப்பதாக அண்மையில் அங்கு சென்று வந்த மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை அதிகாரிஎஸ் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

அவர் அங்கு பார்த்து அறிந்து கொண்டதை பி பி சிக்கு அளித்த பேட்டியில் 4 கைதிகளிடம் பெற்ற வாக்குமூலங்கள் தொடர்பாக விசாரிக்கையில்;

மேற்படி மிழர்கள் கைது செய்யப்பட்டுசுமார் 55 தினங்கள் மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, மனு நீதியற்றமுறையில் துன்புறுத்தப் பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் அனுபவித்த இன்னல்கள் தொடர்பாக விபரிக்கையில்,

மண்வெட்டிப்பிடி, கோடரிப்பிடி மற்றும் எஸ்லோன் பைப் என்பவற்றால் தாம் தாக்கப்பட்டுபின்னர் சப்பாத்துக்கால்களால் கொடூரமான முறையில் ஏறி மிதித்தாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைதிகளான தமக்கு வலுக்கட்டாயமாக சிறு நீர்பருக்கியதுடன்மறுப்பவர்கள் கடும்தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது பாதணியைக் கழற்றி தம்மை தாக்கிய பின்னர் அதனை நாக்கினால் நக்கி துப்பரவு செய்யுமாறு தெரிவித்தவேளை வாந்தி ஏற்பட்டதாகவும் இதனால் குடிப்பதற்கு தண்ணீர்கேட்டபோது கொதி நீரை வாயில் ஊற்றியதால்நீண்ட நாட்களாகச்சாப்பிடவோ கதைக்கவோ முடியாது அவஸ்தைப்பட்டதாகவும்,

கைவிரல்களை மேசை மீது வைத்து பாரம் கொண்ட பொருளால் ஓங்கி அறைந்தமையால் தனது 8 விரல்கள் செயலிழந்திருப்பதாக ஒரு கைதி தனது சோகக்கதையை விபரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## கசிப்பு ஒழிப்பில் காட்டு யானைகளும்

(கொழும்பு)

கசிப்பு உற்பத்தியை, காட்டு யானைகள் தடுத்து நிறுத்தியதுடன், உற்பத்திப் பொருட்களையும் துவம்சம் செய்த சம்பவம் ஒன்று அண்மையில் காலவெவ காட்டுப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் நீண்ட காலமாகவே பெருமளவில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வந்ததாகவும்,

கசிப்பு மணத்தினால் கவரப்பட்ட 25 யானைகள் கொண்ட கூட்டமொன்று அங்கிருந்த பெருமளவு கசிப்பினை அருந்தியதுடன், போதை ஏறிய நிலையில் அங்கிருந்த உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும் துவம்சம் செய்து விட்டுச் சென்றிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

யானைகள் அம்மட்டோடு நிற்காது. அயலில் இருந்த நெல்வயல்களை அழித்தொழித்ததுடன், கிராமங்களிற்குள் புகுந்து அட்டகாசம் புரிந்ததாகவும் கூறப்படுகிறது. (இ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன் மாதம் 01 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 169683 ஏ | 179220 ஏ |
| 182094 ஏ | 189653 ஏ |
| 189653 பி | 189653 சி |
| 189653 டி | 189700 ஏ |
| 189719 ஏ | 190801 ஏ |
| 190823 ஏ | 190823 பி |
| 190823 சி | 190823 டி |
| 190832 ஈ | 190823 எப் |
| 191135 ஏ | 191135 பி |
| 191135 சி | 191135 டி |
| 191205 ஏ | 191205 பி |
| 193185 ஏ | 193185 பி |
| 193185 சி | 193222 ஏ |
| 193359 ஏ | 193359 பி |
| 193359 சி | 193489 ஏ |
| 195181 ஏ | 195216 ஏ |
| 195216 பி | 195293 ஏ |
| 195312 ஏ | 195325 ஏ |
| 195350 ஏ | 195350 பி |
| 195351 ஏ | 195351 பி |
| 195351 சி | 195378 ஏ |
| 195421 ஏ | 195453 ஏ |
| 195453 பி | 195453 சி |
| 195453 டி | 195472 ஏ |
| 195472 பி | 195475 ஏ |
| 195475 பி | 195475 சி |
| 195483 ஏ | 195508 ஏ |
| 195529 பி | 195555 ஏ |
| 195564 ஏ | 195717 ஏ |
| 195732 ஏ | 195739 ஏ |
| 195739 பி | 195739 சி |
| 195739 பி | 195740 ஏ |
| 195744 ஏ | 195744 பி |
| 195744 சி | 195744 டி |
| 197248 ஏ | 197252 ஏ |
| 197255 ஏ | 197286 ஏ |
| 197288 ஏ | 197288 பி |
| 197288 சி | 197288 டி |
| 197294 ஏ | 197294 பி |
| 197309 ஏ | 197313 ஏ |
| 197325 ஏ | 197325 பி |
| 197325 சி | 197325 டி |
| 197325 ஈ | 197330 ஏ |

| | |
|---|---|
| 197367 ஏ | 197391 ஏ |
| 197391 பி | 197391 சி |
| 197405 ஏ | 197414 ஏ |
| 197414 பி | 197417 ஏ |
| 197439 ஏ | 197439 பி |
| 197439 சி | 197456 ஏ |
| 197456 பி | 197456 சி |
| 197468 ஏ | 197470 ஏ |
| 197471 ஏ | 197474 ஏ |
| 197474 பி | 197487 ஏ |
| 197487 பி | 197487 சி |
| 197487 டி | 197487 ஈ |
| 197487 எப் | 197487 ஜி |
| 197488 ஏ | 197493 ஏ |
| 197508 ஏ | 197508 பி |
| 197510 ஏ | 197510 சி |
| 197511 ஏ | 197529 ஏ |
| 197532 ஏ | 197533 ஏ |
| 197535 ஏ | 197538 ஏ |
| 197541 ஏ | 197541 பி |
| 197541 சி | 197541 டி |
| 197541 ஈ | 197551 ஏ |
| 197580 ஏ | 197582 ஏ |
| 197582 பி | 197604 ஏ |
| 197612 ஏ | 197616 ஏ |
| 197616 பி | 197631 ஏ |
| 197631 பி | 197631 சி |
| 197631 டி | 197631 ஈ |
| 197631 எப் | 197635 ஏ |
| 197649 ஏ | 197650 ஏ |
| 197651 ஏ | 197668 ஏ |
| 197669 ஏ | 197676 ஏ |
| 197676 பி | 197676 சி |
| 197700 ஏ | 197700 பி |
| 197700 சி | 197735 ஏ |
| 197735 பி | 197751 சி |
| 197751 சி | 199699 ஏ |
| 199801 ஏ | 199817 ஏ |
| 199864 ஏ | |

## ஒய்வு பெற்றார்

[மந்திகை]

இலங்கை மின்சார சபை பருத்தித்துறை மின் அத்தியட்சகர் பிரிவில்மின்மானிவாசிப்பாளராகக் கடமையாற்றிய க. அருளானந்தம் இம்மாதம் முதல் ஒய்வு பெற்றுள்ளார். [உ-23]

## வ பி போ. சபைக்கு சாரதிகள், நடத்துநர்கள் 60 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் மேலும் 30 சாரதிகள், 30 நடத்துநர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கல் நிகழ்வு கடந்த திங்களன்று ஈ. பி டி. பி யின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் தலைமையில் நடைபெற்றது

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா எடுத்த நடவடிக்கையின் கீழ் மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும்,

மேலும் பலசாரதி நடத்துநர்களை சேர்த்துக்கொள்ள அமைச்சர் ஏற்பாடுசெய்து வருவதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## கல்லெறிந்த சிறுவனை எச்சரிக்கை செய்த இளைஞன் தாக்கப்பட்டான்

(மந்திகை)

வீட்டின்மேல்கல்எறிந்த சிறுவனை எச்சரித்த இளைஞன் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளான்.

கடந்த ஞாயிறு மாலை உடுப்பிட்டி யூனியன்பகுதியில் நடைபெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த ஜெயசரன் (வயது 23) என்பவர் முகத்தில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; இமையாணன் மாதெட்டை சிவஞானவைரவர்ஆலயத்தின் இரவுஉற்சவத்தின் போதுவீட்டின்மேல் கல்லெறிந்தசிறுவன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான்.

சம்பவத்தை யடுத்து சிறுவன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன் கிராம சேவையாளருக்கும் முறையிடப்பட்டு பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டது.

சில தினங்களின் பின் எச்சரித்த இளைஞன் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றவேளை சிலரால்மறிக்கப்பட்டு மூர்க்கத்தனமாகப் பொல்லினால் தாக்கப்பட்டதுடன்மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டது

இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-22)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

துரைராஜா பாக்கியராஜா 18, புங்கன்குளம் வீதி, அரியாலை யாழ்ப்பாணம்.

நாகராஜா பவானி அல்லது நிரேந்திரன் பவானி பிள்ளையார் கோவிலடி, இணுவில் கிழக்கு:

சடையன் சின்னத்தம்பி கைதடி மத்தி, கைதடி.

தவேந்திரராஜா விமலா தேவி பெரியகுளம் சந்தி, சாவகச்சேரி.

நவநீதராஜா யோகேஸ்வரி (மட்டுவில் தெற்கு) தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

க. வேலுப்பிள்ளை மே/பா வே. குலானந்தராசா மூத்த தம்பி வீதி, மானிப்பாய்

ஐ. கோபாலகிருஷ்ணன் (பாலா கராஜ். டச்சு வீதி சாவகச்சேரி) முருக மூர்த்தி கோவிலடி நவாலி கிழக்கு.

ச. சத்தியதேவி (கைதடி கிழக்கு) மே/பா சோவிந்தசாமி சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி.

வை. சுப்பிரமணியம் (குமரநகர், கைதடி) பஞ்சவண்ணா வைரவர் கோவில் புத்தூர்:

ஜ. வேலுப்பிள்ளை (கைதடி தெற்கு) சந்திரோதயா பாடசாலை உரும்பிராய். (உ)

## அல்லாரைச் சம்பவத்திற்கு கடுமையான நடவடிக்கை உடன் வேண்டும்
### டக்ளஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அல்லாரைப்பகுதியில் பெண்மணி ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இது மிகவும் கண்டனத்திற்குரியது. அப்பாவிப் பெண்கள் மீதான தாக்குதல்கள் தொடருவதை உறுதிப்படுத்தும் மற்றுமொரு சம்பவம் இதுவாகும்.

இத்தகைய சம்பவங்கள் தொடருவதற்கு எவ்வகையிலும் இடமளிக்கக் கூடாது என்பதனால் உடனடியாக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஜனாதிபதிக்கு தொலைமடல் மூலம் அனுப்பியுள்ள அவசரச்செய்தியில் தெழுவித்துள்ளார்;

இக்கொடூர சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு மிக கடுமையான தண்டனை கிடைக்கச் செய்வதன் மூலம் எதிர்வரும் காலங்களில் இக்கொடூரங்கள்நிகழாவண்ணம் தடுக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுள்ளார். (உ)

## இராசிபலன்

11.7 2001

(ஆனி 27, புதன்)

சஷ்டி முழுவதும்

பூரட்டாதி மு இ 10.42 வரை

ராகுகாலம் 11.59-1.29

நல்ல நேரம் 4.29-5 59

### மேடம்
தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், சுப செலவு

### இடபம்
அதிகாரம், சுப நிகழ்வு, நல்ல செய்தி, கீழ்ப்படிவு.

### மிதுனம்
உஷ்ண நிலை, முயற்சி தாமதம், சுகலாபம், திடீர் நன்மை.

### கடகம்
உறவினர் வெறுப்பு, கடன் பிரச்சினை, விருந்துண்ணல், காரிய தாமதம்.

### சிங்கம்
திடீர் பயணம், களஸ்திர சுகம், மதிக்கப்படுதல், சிநேகிதர் சந்திப்பு.

### கன்னி
பகைவரால் நன்மை, தொழில் முயற்சி சுப நிகழ்வு, காரியம் கைகூடும்.

### துலாம்
மனச்சஞ்சலம், மதிப்புக் குறைதல், காரிய இடையூறு, புதிய திருப்பம்.

### விருச்சிகம்
தடுமாற்றம், முயற்சி தாமதம், தன்னம்பிக்கைக் குறைவு, வியாதி,

### தனுசு
காரிய நன்மை, சகோதரர் உதவி, தனவரவு, அந்நியர் சந்திப்பு.

### மகரம்
பொருள் விரயம், வாக்குக் கலகம், முயற்சி தாமதம், திடீர் நன்மை,

### கும்பம்
ஆழ்ந்த சிந்தை, பெரியோர் மதிப்பு, ஜனவசியம், காரியம் கைகூடும்,

### மீனம்
சயன சுகக்குறைவு, உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம், பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மரியாயின் சேனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயப் பங்கின் மரியாயின் சேனை சிருட்டி மாதா பிரசீடியத்தின் இரண்டாயிரமாம் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 6.30மணிக்கு கூட்டுத் திருப்பலியும் மாலை 4 30 மணிக்கு கூட்டமும் நடைபெறவுள்ளது. [உ]

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 25

## ஆக்கம் : செல்வி

★ பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.

''எல்லை அறியாப் பெருங்கடலே நீதான்
இரவும் உறங்காயோ? கடலே
அல்லும் பகலும் அலைகடலே - உனக்கு
அலுப்பு இல்லையோ? கருங்கடலே
உருண்டு திரண்டு வருங்கடலே - உடைந்து ஓடிப்போவ
தேன்? கடலே
வெருண்டு மதி தொட்டாய் கடலே - பாறை
விலகிப் போகுமோ? கடலே

01) இப்பாடலில் கூறப்படுவது.
அ) கடற்கரைக் காட்சி
ஆ) கடல் அலைகளின் தோற்றம்
இ) கடலின் காட்சி
ஈ) கொந்தளிக்கும் கடல்

02) அல்லும், பகலும் என்றால்.
அ) இரவும், பகலும்
ஆ) காலையும், மாலையும்
இ) இரவும், சாமமும்
ஈ) காலையும், பகலும்

03) கருங்கடல் என்பதை பிரித்து எழுதினால்.
அ) கரும் + கடல்
ஆ) கருமை + கடல்
இ) கறுப்பு + கடல்
ஈ) கரிய + கடல்

04) இப்பாடலில் கூறப்படும் மதி என்பதன் கருத்து.
அ) பெயர் ஆ) நிலவு இ) புத்தி ஈ) அழகு

★ பின்வரும் சொற்களின் அமைப்பை அவதானித்து சரியான விடை தருக.

05) தீக்கோழி, கோழி ஆயின் ஓநாய் ------
06) கடற்கரை, கரைகள ஆயின் மரக்கலம் ------
07) விளையாட்டு, விடு ஆயின் மரக்கறி ------

★ பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

08) நிறம் ------
09) கரடி ------
10) ஆடு ------
11) பறவை ------

★ பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல் தருக.

12) நூல் ------
13) ஓவியம் ------
14) புவி ------
15) தொழில் ------

★ பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

16) Ink ------
17) Pencil ------
18) Paper ------
19) Book ------
20) Egg ------

★ கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக.

''எனது கிராமத்தின் பெயர் நாவலூர். அது யாழ்; மாவட்டத்திலுள்ள பலகிராமங்களில் ஒன்று. அதன் வடக்கு எல்லையாக யாழ் நகர் செல்லும் பெருந்தெரு அமைந்திருக்கின்றது. கீழ்த் திசையில் கோயிலூர் எனும் கிராமம் உண்டு. தென் திசையில் உப்பாறு ஒன்று ஓடுகின்றது. மேற்றிசையில் சந்திரபுரம் எனும் சிறு நகர் உண்டு.

எனது கிராமத்தின் பெரும்பகுதி வயலும், வயல் சார்ந்த இடமுமாய் இருக்கின்றது.

அவ்வயல் வெளியின் இடையிடையே சிறிய குளங்கள் உண்டு. அவற்றில் செந்தாமரையும், வெண்டாமரையும் மலர்ந்துள்ளன. அவற்றின் அயலிலே பசிய தென்னஞ் சோலைகளும், மாஞ்சோலைகளும் செழித்துக் காணப்படுகின்றன.

21) இப்பந்தியில் குறிப்பிடப்படும் கிராமங்கள் எவை?
22) உப்பாறு எந்தக் கிராமத்தின் தென்திசையாகச் செல்கிறது?
23) வயலும் வயல் சார்ந்த இடமும் எவ்வாறழைக்கப்படும்?
24) நாவலூர்க் கிராமத்தின் அழகை எடுத்துக் காட்டுவனவாக விளங்குபவை எவை?
25) மேலே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்கும் பொழுது உமது மனதில் தோன்றும் உணர்ச்சி யாது?

★ பின்வரும் உருவில் விலையிடலுக்கு பயன்படுத்தப்பட்ட எண்களும், அவற்றைக் குறிக்கும் சங்கேத எழுத்துக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து கீழ் வரும் வினாக்களில் காணப்படும் சொற்கள் குறிக்கும் எண்களை இனம் காண்க?

| 9 | 2 | 4 | 8 | 6 | 3 | 5 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| வி | அ | த | டி | ர | க | ம் | ரு |

26) அருவி ------
27) விரதம் ------
28) கரடி ------
29) தகரம் ------
30) அரம ------
31) கடிதம் ------

★ கீழ்வரும் எண்கள் குறிக்கும் சொற்களை இனம் காண்க.

32) 379 ------
33) 48 ------
34) 9635 ------
35) 39 ------

# புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல 24

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01] ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
02] மோ. மைதிலி, வட்டு மத்தியகல்லூரி
03] ம. தினேஷ் வல்வை. ம. வித்தியாலயம்
04] மோ. மதன், வல்வை ம. வித்தியாலயம்
05] கு சிந்துஜா, வல்வை ம. வித்தியாலயம்
06] மு. கௌசிகா, வல்வை. ம. வித்தியாலயம்
07] பு. சயனா, வல்வை, அ மி த க. பாடசாலை
08] ர. சயந்தன், வல்வை சிவகுரு வித்தியாசாலை
09] ஜெ செந்தில்குமரன், வல்வை. ம ம வித்தியாலயம்
10] கு. ஜெரிமின், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
11] இ சஞ்சீவ், யாழ் மத்தியகல்லூரி
12] லூ அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
13] வெ. ஜெயப்பிரசாந், யாழ் ஆரம்ப பாடசாலை
14] இ இராகுலன், யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
15] ம விஜி பிளவத்தை அ மி. த. க. பாடசாலை
16] கு. ஜெரின், யாழ் மத்தியகல்லூரி
17] த ஏகவரதன், யாழ். இந்து ஆரம்பபாடசாலை
18] யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
19] பா சாயிஷங்கர், வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
20] ச ரஞ்சிக்குமார், வல்வை விநாயகர் வித்தியாலயம்
21] அ தர்ஷிக், மயிலிட்டி றோ க. த க. வித்தியாலயம்
22] ப. சஜிந்தன், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
23] த. தர்மீகன், உடுவில் மகளிர்கல்லூரி
24] ச. மேனன், யாழ் புனிதஜோண் பொஸ்கோவித்தியாலயம்
25] சி நிருபா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
26] தி தனமஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
27] சி துவாரகன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
28] சி அநோஜன், தம்பசிட்டி மெ மி த. க. பாடசாலை
29] த சஜனி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
30] அ கடோற்கஜன், யாழ். இந்துஆரம்ப பாடசாலை
31] வி. பில்சன், யாழ்: மத்தியகல்லூரி
32] இ அபிஷேக், யாழ் புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
33] அ யூட்சன், யாழ் மத்தியகல்லூரி
34] ப. அஜந்தன், யாழ் மத்தியகல்லூரி

(நாளை தொடரும்)

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடையினைத் தருக.

36) ராஜி கடைக்குச் சென்று 57 அப்பியாசக் கொப்பிகள் வாங்கினான். ஆனால் ராஜி கடைக்காரருக்கு செலுத்திய பணம் அப்பியாசக் கொப்பிகளுக்கு ஆகும் செலவை விட 75 ரூபா குறைவாக இருந்தது? ஒரு அப்பியாசக் கொப்பியின் விலை 9 ரூபா எனின் ராஜியிடம் இருந்த பணம் எவ்வளவு?

37) கமலன் அமலனிலும் இருவயது குறைந்தவன்; அமலனின் தற்போதைய வயது அவனது ( ) வின் வயதைப் போல் அரைமடங்காகும். அம்மாவிற்கு அப்பாவிலும் ஒருவயது குறைவு. தற்போது அப்பாவின் வயது 41 ஆயின் கமலனின் வயது?

38) சட்டை ஒன்று தைப்பதற்கு $2\frac{3}{4}$ மீற்றர் துணி தேவை தைப்பதற்குரிய கூலி 100 ரூபாவாகும் ஒரு மீற்றர் துணியின் விலை 215 ரூபா எனின் மூன்று சட்டைகள் தைப்பதற்கு ஏற்படும் மொத்தச் செலவு யாது?

39) சசியின் வகுப்பில் சசியையும் சேர்த்து 50 மாணவர்கள் உள்ளார்கள். இவர்களில் 35 பேர் பாடசாலைக்கு பேருந்தில் வருகிறார்கள். ஏழுபேர் துவிச்சக்கர வண்டியில் வருகின்றனர். இரண்டு பேர் காரில் வருகின்றனர். மிகுதிப் பேர் நடந்து வருகின்றனர். நடந்து வருபவர்களின் எண்ணிக்கை யாது?

40) ரங்கராஜனுக்கு ஆறு மகன்மார் உள்ளனர். ஒவ்வொரு மகன்மாருக்கும் ஒவ்வொரு தங்கை இருக்கின்றனர். ஆகவே ரங்கராஜனின் குடும்பஅங்கத்தவர்கள் எத்தனை பேர்?

**குறிப்பு:-**

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் (விடைகளின் இலக்கத்தைக் குறிப்பிடவேண்டாம்) இதற்கான விடைகளை 16-07-2001 இற்குமுன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

**கல்விப் பகுதி**
**வினா இல - 25**
''வலம்புரி''
இல: 15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர். ...............
சொந்த முகவரி ...............
கற்கும் பாடசாலை ...............
மாணவர் கையொப்பம் ...............

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

புலமைப்பரிசில்பரீட்சை

## வினா இல-24 விடைகள்

01) மன்னன்
02) கவிஞன்
03) தோழி
04) யானை
05) மயில்
06) அண்ணி
07) ஆமை
08) செவ்வந்தி
09) சிங்கம்
10) படிக்கிறான்
11) கூடு
12) காட்டில்
13) பனிக்கட்டியினால்
14) செவ்விந்தியர்கள்
15) மண்புழு
16) நீர்
17) சண்டி
18) திருகோணமலை
19) விக்டோரியா
20) தேயிலை
21) வழிபாடு
22) லாங்கு
23) C
24) பாடசாலை
25) கோவில்
26) தபாற்காரர்
27) உங்களுக்கு நன்றி
28) சிங்கம
29) 50 பழங்கள்
30) 33 மிட்டாய்கள்
31) பிழை
32) சரி
33) பிழை
34) பிழை
35) பவளவிழா
36) கிரகம்
37) வளியில் கலந்துள்ளது
38) ஒரு வகைத் தானியம்
39) மின்சாரத்தைக் கடத்தாது
40) விலை கூடியது

## திருமலை மாவட்டம் முதலிடம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மாகாண பாடசாலைகளுக்கிடையே நடாத்திய விளையாட்டுப் போட்டியில் திருமலை மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகியன முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளது (செ)

## 20 ஆம் திகதி இறுதித்தினம்

(மந்திகை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற வணிகர்கள், வணிக நிலையங்களுக்கு இழப்பீட்டு கடன் பெறுவதற்கு சங்கத்தால் விநியோகிக்கப்பட்ட படிவத்தினை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்பு சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (உ-23)

## காய்ச்சல் பரவுகிறது

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் காய்ச்சலுடன் கூடிய வயிற்றோட்ட நோய் பரவ ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து மேற்படி நோய்க்குச் சிகிச்சைபெறச் செல்வோர் தொகை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. (உ-23)

## வி. அ. அட்டை ஒப்படைப்பு

(மந்திகை)

பாடசாலை வளவு கரணவாய் கிழக்கைச் சேர்ந்த சிவதாசன் இரதிபசிறி என்பவருடைய விசேட அ. அட்டை (0909017784) மற்றும் இராணுவ அனுமதிப் பத்திரம் என்பன வீதியில் கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது (உ-23)

## இன்று ஒரு தகவல்

# பிள்ளையும் புதையலும்

ஓர் ஊரில் செண்பகம் என்ற பெண் இருந்தாள். கணவனை இழந்த அவள் தன் ஒரே மகனின் மீது உயிரையே வைத்திருந்தாள். அவள் எவ்வளவு உழைத்தாலும் இருவரும் வயிறார உண்பதற்கு உணவு கிடைப்பதில்லை. இருவரும் வறுமையில் வாடினார்கள். தன் தாயாரின் துன்பத்தை எப்படியும் துடைக்க வேண்டும். அதற்குப் பணம் வேண்டுமே என்ன செய்வது? என்று சிந்தித்தான் சிறுவன். அப்பொழுது அவனுக்குக் 'காட்டிற்குள் சென்றால் துறவிகளைக் காணலாம்' அவர்கள் மூலம் புதையல் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டுவரலாம். அது மட்டும் கிடைத்துவிட்டால் நம் தாயின் துன்பத்தை நீக்கி விடலாம்' என்ற எண்ணம் தோன்றியது, இதே நினைவில் காட்டிற்குள் வெகு தூரம் சென்றான் அவன். அங்கே மரத்தடியில் துறவி ஒருவர் வீற்றிருந்தார்.

அவரைப் பணிவுடன் வணங்கிய அவன் தன் குடும்ப நிலையைக் கூறி ''எப்படியேனும் எனக்குப் புதையல் இருக்குமிடம் சொல்லுங்கள். அதைக்கொண்டு என் தாயின் துன்பத்தைப் போக்குவேன்'' என்று வேண்டினான்

'மகனே எழுந்திரு! உன் தாயாரிடம் ஏற்கனவே புதையல் கிடைத்துவிட்டது. இனி நீ மகிழ்ச்சியுடன் வீட்டிற்குச் செல்' என்றார் துறவி. துள்ளிக்குதித்துக் கொண்டே வீடு திரும்பிய சிறுவன் தன் தாயாரைப்பார்த்து நடந்த எல்லாவற்றையும் கூறினான். 'அம்மா! அந்தத்துறவி உமக்குப் புதையல் கிடைத்துவிட்டதாகக் கூறினாரே எங்கே அந்தப்புதையலைக் காட்டுங்கள் பார்க்கலாம்' என்று கேட்டான்.

உடனே அந்தத்தாய் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு, மகனே! நீதான் அந்தத் துறவி சொன்ன புதையல், எந்தமகன் தன் தாயின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறானோ அவன்தான் அந்தத் தாய்க்குக் கிடைத்த உண்மையான புதையல் ஆவான். இதைத்தான் எனக்குப் புதையல் கிடைத்துவிட்டதாக அந்தத்துறவி சொல்லியிருக்கிறார்' என்று விளக்கம் தந்தாள், மகனும் மகிழ்ச்சி அடைந்தான் □

பேராசிரியர் எ. சோதி

# அரசும், புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட தார்மீக ரீதியான செல்வாக்கை இந்தியா பிரயோகிக்கவேண்டும்

## இந்து சமயப் பேரவை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிறன்று அளவெட்டி நாகவரத நாராயண சுவாமி தேவஸ்தானத்தில் தலைவர் அருட்கவி, விநாசித்தம்பி தலைமையில் இடம் பெற்றது.

அன்றைய தினம் புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம் பெற்றதுடன், பல்வேறு தீர்மானங்களும் சபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள இனமோதல்களைத் தடுத்து நிறுத்தி இந்துக்களை காப்பாற்றுவதற்கு கோடிக்கணக்கான இந்துக்கள் வாழும் இந்தியத் திருநாடு, இலங்கை அரசையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு தமது தார்மீக ரீதியான செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டுமென இந்திய அரசைக் கோருவது.

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சு வார்த்தைக்கு முன்வர வேண்டுமென இலங்கைவாழ் இந்துக்கள் சார்பில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் கோருவது

போரைப் பயன்படுத்தி இந்துக்களை மதம் மாற்றும் கிறிஸ்தவ அமைப்புக்களை இதனைக் கைவிடுமாறும்,

பல்லாயிரம் ஆண்டுகளாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த எமது மக்களிடையே பிரிவினையைத் தூண்டும் இத்திய நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கான முழுப் பொறுப்பையும் சம்பநதப்பட்ட கிறிஸ்தவக் குழுக்களே ஏற்றுக் கொள்ள வேண்டி வருமாகையால், இத்திய நடவடிக்கையை கைவிடுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோருவது உள்ளிட்ட வேறும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(உ)

## மேலதிகநீதிபதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டமேலதிக நீதிபதியாக அண்மையில் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பிரபல சட்டத்தரணி திருமதி சறோஜினி இளங்கோவன் நேற்று முன்தினம் தனது கடமையினை பொறுப்பேற்று வழக்கு விசாரணையினை மேற்கொண்டார்

இவர் மேலதிக குடும்ப நீதிபதியாகவும் கடமையாற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-6)

## இன விகிதாசார அடிப்படையில் வேலை வாய்ப்பு

(கொழும்பு)

அரசாங்க தொழில்வாய்ப்புகள் இன விகிதாசார அடிப்படையில் வழங்கும் நடைமுறை மீண்டும் அறிமுகப் படுத்தப்படல் வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் 30வது வருடாந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது (உ)

## பௌராணிகர் கௌரவிப்பு

(ஏழாலை)

தெல்லிபபழை ஸ்ரீதுர்க்கா தேவிதேவஸ்தானததில் இடம் பெற்று வந்த பெரிய புராண படன பூர்த்தி விழா நாளை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் பெரிய புராண படனம் நிகழ்த்தி வந்த வா. அகிலேஸ்வரக் குருக்கள், சி. சண்முகவடிவேல், சி ஈஸ்வரதாஸ் சு. விஸ்வநாதர் ஆகிய 4 பௌராணிகர்களும் கௌரவிக்கப் படவுள்ளனர். (உ-12)

## நாவேந்தன் நினைவு தினம்

எழுத்தாளர் நாவேந்தனின் (த. திருநாவுக்கரசு) நினைவு தினம் இன்றாகும். சுதந்திரன் பத்திரிகை பண்ணையில் அவர் வளர்ந்தவர். தெய்வ மகன் அவர் எழுதி வெளியிட்ட சிறுகதை நூலாகும்,

மரியாளின் காவியத்தையும் அவர் படைத்துள்ளார். கல்லூரி அதிபராக அவர் பணியாற்றியுள்ளார். (து)

## ஊரதீவில் சிறுவர் குதூகலமும்கலை நிகழ்வும்

(ஈச்சமோட்டை)

மனித முன்னேற்ற நடு நிலையதின் அனுசரணையுடன் ஊரதீவு அறிவகத்விழிப்புணர்வு குழுவினரால் சிறுவர் குதூகலம கலைநிகழ்வு எனும் ஆற்றுகை எதிர் வரும 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 .மணிக்கு ஊரதீவு அறிவக முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களை மகிழ்வூட்டும் முகமாகவும் அவர்களது கலைத்திறன்களை வெளிக் கொணர்ந்து அவற்றை வளர்க்கும் முகமாகவும் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கமலாம்பிகை கனிஷ்ட வித்தியாலய அதிபர் த. இராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில், பிரத விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் எப் எக்ஸ். செல்வநாயகம் ஆகியோரும். சிறப்பு விருந்தினர்களாக மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குநர் வணபிதா சி ஜி. ஜெயக்குமார் அடிகளாரும, வேலணை பிரதேச சபைதவிசாளர் கருணாகரகுருமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-59)

## எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சை வெட்டுப்புள்ளியை குறைக்க அமைச்சரிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழககு மாகாண சபையினால் நடத்தப்பட்ட பொதுச் சேவைகள் இணைந்த சேவைகளுக்கான எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில தோற்றிய மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளியை 140 ஆக குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இந்தப் பரீட்சையில் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ)

## புதிய உதயம் நாடகப் போட்டி வெள்ளியன்றுமுதற்தெரிவு

(ஈச்சமோட்டை)

இலங்கை கரிதாஸ் நிறுவனமும செடக்கும் கியூடெக நிறுவனத்துடன் இணைந்து நடத்தும பாடசாலை மட்ட 'புதிய உதயம்' நாடகப் போட்டிக்கான முதற்தெரிவுகள் எதிர் வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் பிரதான வீதியில அமைந்துள்ள மறைக்கல்வி நடு நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

தன்னோடும், குடும்பத்தோடும், அயலவனோடும், சமூகத்தோடும, உலகோடும், இறைவனோடும் இணைந்து சமாதானத்தை மலரவைப்பதை கருவாகக் கொண்டு இந் நாடகப் போட்டி அமைகிறது.

இருபது நிமிடத்தைக் கொண்ட இந் நாடகப்போட்டியில் ஒன்பது பாடசாலைகள் கலந்து கொளகின்றன

[உ-59]

## குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் மாக்ஸ் தவறுதலாக வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குடும்பஸ்தரான மயில்வாகனம் பிறேமச்சந்திரன் (வயது36) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (உ-104)

## ஹெரோயின் கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

இலங்கைக்கு கடத்திவர முனைந்த 50 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை தமிழகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில், வான் சாரதி ஒருவர் உட்பட 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ)

## விரிவான வகையில் வீரமக்கள் தின ஏற்பாடு

(வவுனியா)

வடக்கு-கிழக்கில் 12 வது வீரமக்கள் தினம் இம் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 16 ந் திகதி வரை அனுஷ்டிப்பதற்கு தமிழீழ விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்து வருகின்றது.

விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்ததலைவர்கள், போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து இத் தினம் கொண்டாடப் படவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ அமிர்தலிங்கம் 1983 ஆம் ஆண்டு கொலை செய்யப் பட்ட நாள் முதல் உமா மகேஸ்வரன் கொலை செய்யப்பட்ட நாள் வரையிலான காலப் பகுதியில் வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப் படுகிறது.

இத்தினத்தையொட்டி சிரமதானப் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ம)

## தேசியஅரசில் சிறுபான்மை கட்சிகளும் இடம்பெற வேண்டும்

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதாக இருந்தால், அதில் ஐக்கியதேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்தால்மட்டும் போதாது,

சகல சிறுபான்மைக் கட்சிகளும் தேசிய அரசில் இடம் பெற வேண்டுமென்று அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதே வேளை, அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சிகொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றி பெறச் செய்யாது தோல்வி அடையச் செய்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு உதவ வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். (ம)

## யாழ் பல்கலைக்கழகம் மூடப்பட்டமை குறித்து ஈ. பி. டி. பி. அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டமை அதிர்ச்சிக்குரியதாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் தொகையை அதிகரிக்கவும்,

அதன் வளங்களைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை வெற்றி பெற்றுள்ள வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இழுத்து மூடப்பட்டுள்ளமை தமிழ் பேசும் மாணவர்களின் கல்விப் பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கு குந்தகமானது என்பதில் ஐயமில்லை.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி நேற்று விடுத்தசெய்திக் குறிப்பொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில், கவலைக்குரிய இந் நிலைமையை மாற்றி பல்கலைக் கழகம் மீண்டும் சுமுகமான முறையில் செயற்படும் வகையில் முழு முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## நல்லூரில் இன்று தெருநாய்கள் அழிப்பு

இன்று காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நல்லூர் பிரதேசசபையின் எல்லைக்குள் உள்ள பாரதிபுரம், திருநெல்வேலிச் சந்தைச் சுற்றாடல், ஆடிய பாதம்வீதி ஆகிய இடங்களில் தெருநாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளதாகவும்,

அப்பகுதி மக்கள்தமது வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டி வைக்குமாறும் நல்லூர் பிரதேசசபை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ)

# சீன - அமெரிக்க பகைமை மெல்ல நீங்குகிறது?

(வஷிங்டன்)

சீனாவில் நடைபெற இருக்கும் சீன-அமெரிக்க உச்சி மாநாட்டை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவில் ஸ்திரத்தன்மை ஏற்படவாய்ப்புள்ளதாகவும் இதன் மூலம் எதிர் காலத்தில் இரு நாடுகளுக்குமிடையே ஆக்க பூர்வமான பணிகளை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம் எனவும் அமெரிக்க வெளி நாட்டமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சீனாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கல்விமான்களான இரு அமெரிக்கப் பிரஜைகளை விடுதலை செய்வது தொடர்பாக இந்த உச்சி மாநாட்டின் போது பேசவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை, புஷ்ஷின் அறிக்கைகளும் தாய்வானுடன் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட நெருக்கமும் சீன-அமெரிக்க உறவில் விரிசல் ஏற்பட வைத்தாலும் தற்போது ஐ.நா. ஈராக் மீதான தடை விஷயத்தில் சீனா அமெரிக்காவை ஆதரித்து வருவது தெரிந்ததே.

(உ-9)

# பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியைகொல்ல பின்லேடன் திரைமறைவில் நிதியுதவி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அரோயோவை கொலை செய்ய சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடன் நிதியுதவி செய்வதாகத்திடுக்கிடும் செய்திகள் வெளியாகியுள்ளன.

புலனாய்வுத் துறையினரின் அறிக்கை ஒன்றை ஆதாரம் காட்டி பிலிப்பைன்ஸ் ஸ்டார் எனும் பத்திரிகை மேற்படி செய்தியை வெளியிட்டுள்ளது.

அரோயோ மீது குண்டுத் தாக்குதல் நிகழ்த்தவும் மணிலாவில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது தாக்குதல் நடத்தவும் அபுசெய்யாப் கெரில்லாக்களுக்கு பின்லேடன் நிதி உதவி அளித்துள்ளார் என்று மேற்படி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களிற்கு நிதியுதவி அளித்து வரும் பின்லேடன் அபுசெய்யாப் ஆதரவாளர் என முன்பு செய்தி வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

(உ-9)

# நேபாளத்தில் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் 39 பொலிஸார் பலி

(காட்மண்டு)

நேபாளத்தில் உள்ள பொது உடமைக்கிளர்ச்சியாளர்களினால் 39 நேபாளப் பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இத்தகைய தமது வன் செயல்களை தாம நிறுத்த வேண்டுமாயின் சர்வ கட்சி மாநாடு கூட்டப்பட வேண்டும் எனவும், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமெனவும், புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட வேண்டுமெனவும் கிளர்ச்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது மேற்படி கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க மறுத்தால் ஏற்படும் பாரிய விளைவுகளுக்கு அரசே பொறுப் பெனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-9)

# உலக தரிசனம்

# மேற்கு ஐரோப்பாவில் புயற்காற்று 18 பேர் பலி

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வீசிய கடும் புயற்காற்றுக் காரணமாக கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் 18 பேர் பலியாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடும் காற்றுக் காரணமாக இப்பகுதியில் உள்ள நாடுகளில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் பலர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புயல் சம்பவத்தால் இடிபாடுகளுக்குள் அகப்பட்டவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ-9]

# ஜமேக்கா தலைநகரில் துப்பாக்கிக் குழு தாக்குதல்

(கிங்ஸ்டன்)

ஜமேக்காவின் தலைநகரான கிங்ஸ்டன் பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும் இனந்தெரியாத துப்பாக்கிக் குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட 3 நாள மோதல்களில் 2 பொதுமக்கள் உட்பட 20 பேர் பலியாகியுள்ளனர்.

தலை நகரின் மேற்குப் பகுதியில் அண்மைக் காலமாக வன்முறைகள் இடம்பெறுவதாக அறிந்த படையினர் அங்கு தேடுதல் வேட்டை நடத்திய போது அங்கு மறைந்திருந்த துப்பாக்கிக் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து ஜமேக்காவின் பிரதமர் பீ.பே. பீற்றஸ் ஜென் தலைநகரில் வன் செயல, உயிராபத்துக்கள் ஏதும் விளைவிக்காமல் துப்பாக்கிக் குழுவினை கண்டு பிடிக்க வேண்டும் என்று படையினருக்கு தெரிவித்ததுடன் இது தொடருமானால் வெளிநாட்டு உதவியை நாடவேண்டி வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

[உ-7]

# உணவுக்காக எண்ணெய் ஈராக்கின் திட்டம் மேலும் 5 மாதங்கள் நீடிப்பு

(பக்தாத்)

ஈராக்கின், உணவுக்காக எண்ணெய்என்ற மனிதாபிமானத்திட்டத்தை மேலும் 5 மாதங்கள் நீடிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் ஈராக்கும் ஐக்கிய நாடுகள் சபையும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம எதிர்வரும் நவம்பர் 30 ஆம திகதிவரை ஈராக் எண்ணெய்யை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுமென்று ஐக்கியநாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக்கின் மீது பொருளாதாரத் தடையை மேலும் தீவிரப்படுத்த வேண்டுமென்று அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாகச் சேர்ந்து திட்டமிட்டதுடன்.

ஈராக் மீதுள்ள பொருளாதாரத்தடையை நீக்குவதா இல்லையா என்ற பேச்சு வார்த்தைக்கு எதிர்ப்புத்தெரிவித்து ஈராக் கடந்த யூன் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து தனது எண்ணெய் ஏற்றுமதியை இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-7)

## 121 பேர் பலி

பிலிப்பைன்சில் ஏற்பட்ட புயல் காரணமாக ஏறத்தாழ 121 பேர் பலியாகியுள்ளதாகவும் 45 பேர் காணாமல் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன.

காயமுற்ற நிலையிலுள்ள 130 பேரில் பலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரியவருகிறது.

(உ-7)

# பலஸ்தீனர்மீது இஸ். தாக்கு ஐ. நா. செயலர் கண்டனம்

(வாஷிங்டன்)

பலஸ்தீனத் தீவிர வாதிகள் மீது இலக்கு வைத்துத் தாக்கும் இஸ்ரேலின் செயலை அமெரிக்காவும் ஐ. நா. பொதுச் செயலர் கோபி அனானும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சரவை பலஸ்தீனர்கள் மீது தாக்குதலை தொடர முடிவு செய்ததை அடுத்து இக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

பலஸ்தீன தீவிரவாதிகளைக் கொல்வதாகக் கூறி மேற்குக் கரைகாஸாவில் யூதக்குடியேற்றங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவது மிலேச்சத்தனமானது என்று மேற்படி கண்டனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

# இந்திய- பாக். பேச்சுக்களில் பங்கு கொள்வோர் பட்டியல் வெளியானது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் பிற்கும் இந்திய பிரமர் வாஜ்பாய்க்கும் இடையில் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தையின் போது பாகிஸ்தான் சார்பில் கலந்துகொள்வோரின் பட்டியலை பாகிஸ்தான் வெளியிட்டுள்ளது

பாகிஸ்தான் குழுவில் வெளியுறவு அமைச்சர் அப்துல் சதாத், வெளியுறவுச் செயலர் இனாமல்குக் மற்றும் வேறும் உயர் அதிகாரிகளும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

பத்திரிகைத்துறை செயலர் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல் உள்துறை அமைச்சரும் வணிகத்துறை அமைச்சரும் இக்குழுவில் இடம்பெறவில்லை.

(து)

# ஆயுத உற்பத்தி தடைக்கு அமெ. எதிர்ப்பு

(வாஷிங்டன்)

சிறு ஆயுதங்களைஉற்பத்தி செய்து விற்பதை தடை செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள ஸ்தாபனத்தல் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது.

சிறியரக ஆயுதங்கள் செய்வதை யாரும் தடை செய்யக் கூடாதென்றும அந்த உற்பத்தி மூலம் அமெரிக்காவில் பல சிறுரக ஆயுதத் தொழிற்சாலைகள் நல்லவருமானத்தைப் பெறுவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உலகில் பல நாடுகளுக்கு வருடா வருடம் சிறுரக ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதாகவும் இதை நிறுத்துவதால் பல இலட்சம்பேர் வேலைவய்ப்பினை இழக்க நேரிடுமென்றும அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

(து)

# சுரங்கப் பாதைகள் கண்டு பிடிப்பு

(பீஜிங்)

சீனாவில் மிக நீளமான சுரங்கப் பாதைகள் இருப்பதாககண்டறிந்துள்ளார்கள்.

இந்த சுரங்கப்பாதைகளில் ஒன்று மூன்றரை கிலோ மீற்றர் நீளம் கொண்டதென்று குறிப்பிடப் படுகிறது.

மேற்படி சுரங்கப் பாதைகளில் நூதன முத்துப்பாறைகள் தென்படுவதாகவும் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

(து)

# பொலிஸாரின் சித்திரவதைகளை தடுத்து நிறுத்த நைஜீரிய மக்கள் வேண்டுகோள்

(லாகோஸ்)

நைஜீரிய பொலிஸார் அந்நாட்டு சிவிலியன்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் சித்திரவதைகள் மற்றும் கொலைகளை ஜனாதிபதி தலையிட்டுத்தடுக்கவேண்டும் என்று நைஜீரிய பொது மக்கள் கேட்டுள்ளனர்.

நைஜீரியாவில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்தாலும் பொலிஸார் இராணுவ ஆட்சியின் போதிருந்த சித்திரவதை, பயமுறுத்தல் ஆகியவற்றைத் தொடர்ந்த வண்ணம் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அப்பாவி நைஜீரியர்களிடம் பணம் பறித்தல் கொலைப் பயமுறுத்தல் போன்ற அட்டூழியங்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை என ஜனாதிபதி ஒபசான் சஞ்சோவிடம் நைஜீரிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-9)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

## ★ கும்பிடச் செல்லும் குட்டி நாய்

போர்த்துக்கலில் உள்ள நாயொன்று பிரதி ஞாயிறு தோறும் 16 மைல் நடந்து சென்று தேவாலயப் பூஜைகளில் மனிதர்களைப் போலவே பக்தியுடன் கலந்து கொள்கிறதென்றால் ஆச்சரியமில்லையா?

நீற்றா என்னும் பெயரை உடைய இவ் வளர்ப்பு நாய் கடந்த 3 ஆண்டுகளாக இந் நடை முறையைக் கடைப்பிடித்து வருகிறதாம்.

ஞாயிற்றுக்கிழமை என்றவுடன் காலை 5.00 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் இந் நாய் 7:30 மணிக்கு ஆரம்பமாகும் பூஜைகளில் கலந்து கொள்கிறதாம்.

வியப்பு என்னவென்றால் பூஜையின் போது மனிதர்களைப் போலவே இந் நாயும ஆசனத்தில் அமர்ந்தும், எழுந்தும், முழங்காலால் தவண்டும் வழிபடுகிறதென்றால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும்.

## ★ ஹிட்லரின் திருமண மோதிரம்

சர்வாதிகாரிஹிட்லரைப் பற்றி அறியாதவரேஇல்லை எனலாம், இந்த சர்வாதிகாரியின் திருமண மோதிரம் ஒன்று தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

1945 ஆம் ஆண்டு ஹிட்லரின் மனைவியான ஈவா தற்கொலை செய்துகொண்டார் இவர் தற்கொலை செய்வதற்கு முன் தனது திருமண மோதிரத்தை நண்பியான ஹர்னா பனிடர் எனபவரிடம் கொடுத்துள்ளாராம். ஹர்னா இம் மோதிரத்தை நீண்ட காலமாக லோக்கரில் வைத்திருந்த போது திடீரென எப்படியோ மறைந்து விட்டது அப்படிக் காணாமல் போன இம் மோதிரமே தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

-அவதானி-

நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந் தூ ஊக்கின் உயிர்க்கிறுதி ஆகிவிடும்.
குறள்

# வலம்புரி

## அச்சம் தரும் அவசர முடிவு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நேற்றுடன் காலவரையறையின்றி மூடப்பட்ட செய்தி தமிழ் மக்களிடையே உள்ளார்ந்தமான அதிர்ச்சியையும், அதே நேரத்தில் ஒருவகை அச்சத்தையும் உண்டு பண்ணியுள்ளது. பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவன் திவ்வியனின் கைதைத் தொடர்ந்து மாணவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பை அடுத்து பல்கலைக் கழகம் மூடப்பட்ட செயலானது 'இஞ்சியைக் கொடுத்து மிளகாயைப் பெற்றது' போல் ஆகிவிட்டது. யாழ். பல்கலைக் கழகத்தை மூடுவது பற்றிய தீர்மானத்தை உயர் கல்வியமைச்சர் சாதாரணமாக எடுத்திருப்பினும் அதன் தாக்கம்-எதிர்விளைவு பாரியதாக அமையுமென்ற அச்சம் கல்வியாளர்களிடையே நிலவவே செய்கிறது.

மாணவன் திவ்வியனின் கைது, படைத்தரப்பைப் பொறுத்த வரை ஆயிரத்தில் ஒன்றாக இருப்பினும் பல்கலைக் கழக மாணவர்களிடையே அது பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை திடீரென பல்கலைக்கழகத்தை மூடும் அறிவிப்பால் வன்னிப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளதுடன் தம்மது பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு என்ற அச்சம் கலந்த நியாய பூர்வமான கேள்வியையும் எழுப்பியுள்ளனர்.

மாணவன் திவ்வியனின் கைது - பல்கலைக் கழகம் மூடப்பட்டமை ஆகிய நடவடிக்கைகள் வன்னிப் பகுதி மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளைக் கொடுத்தவர்களிடையேயும் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளதுடன் எந்த நேரத்தில் எது நடக்குமோ என்ற பயப் பீதி இப்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந் நிலைமை இனியுப் தொடராமல் இருக்க வேண்டுமாயின் அரசு உடனடியாக மாணவன் திவ்வியனை விடுதலை செய்வதுடன் மூடப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறந்து சுமுகமானதோர் சூழ்நிலையை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

# அன்று அமோக ஆதரவுடன் விளங்கிய கலைஞர்

# இன்று அனுதாப அலையை எதிர்நோக்குகிறார்

சாதாரண குடும்பத்தில் பிறந்து இன்று உலகத்திலுள்ள தமிழர்களுக்கெல்லாம் பெருமகனாக விளங்கும் கலைஞர் கைது செய்யப்பட்ட முறையை அறிந்த தமிழ் நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலகில் வாழும் தமிழ் மக்களும் கவலையடைந்துள்ளனர்.

### மாணவர்நேசன்

''தி.மு.கழகம் ஒரு குடும்பமாக விளங்குகின்றது. அந்தக் குடும்பத்தின் பொறுப்புள்ள தலைவனாகக் கருணாநிதி விளங்குகிறார்'' என்று பாராட்டினார் அறிஞர் அண்ணா. கலைஞர் பதினான்கு வயதில் பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் பேச்சைக் கேட்கசென்றவர். பொது வாழ்வு பற்றிச் சிந்தித்தார். இந்தித்திணிப்பால் தமிழ் நாட்டில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதில் ஆர்வம் காட்டி தன்னுடன் கற்ற மாணவர்களை ஒன்று திரட்டி ''மாணவர் நேசன்'' என்ற கையெழுத்துப் பத்திரிகை மூலம் இந்தித் திணிப்பை எதிர்த்தார்.

தமிழ்நாடு மாணவ மன்றத்தை நிறுவி அதன் தலைவரானார் கலைஞர். இம்மன்ற வெளியீடாக முரசொலியை வெளியிட்டார். முரசொலி இன்றுவரை தி.மு.க.வின் கவசமாக விளங்கி வருகின்றது. பெரியார் கலைஞரின் மேடைப் பேச்சை அறிந்து அவரை ஈரோட்டுக்கு அழைத்தார்.

கலைஞர் ''குடியரசு'' இதழில் பணியாற்றச் சம்மதித்தார். தி.மு.க. பிரசாரத்துக்குச் சினிமாவைப் பயன்படுத்த முற்பட்டார். பராசக்தி, ராஜகுமாரி, மந்திரி குமாரி, மருதநாட்டு இளவரசி, மலைக்கள்ளன் போன்ற பல படங்களுக்கு கதை வசனம் எழுதிப் புகழ் பெற்றார். தி.மு.கழகப் பிரசாரக்குழு உறுப்பினராக அறிஞர் அண்ணா கலைஞரைத் தேர்ந்தெடுத்தார்.

### தி. மு. க. ஆரம்பம்

1947 செப்டம்பர் 17 ஆம் திகதி இராஜபுரத்தில் றொபின்சன் பூங்காவில் தி.மு.க ஆரம்பிக்கப்பட்டது. அந்த விழாவில் கலந்து கொண்ட கலைஞர் இன்று வரை தி.மு.க வை கட்டிக் காத்து வருகிறார். தி.மு.கழகக் கொள்கைபரப்பு நாடகங்களைக் கலைஞர் எழுதினார் அந்நாடகங்களில் சிவாஜிகணேசனையும் நடிக்க வைத்தார் கலைஞர் கதை வசனம் எழுதிய பராசக்தி படம் அவருக்குப் பெரிய புகழ் அளித்தது புராணப் படச் சீசனை ஒழித்து சமூகப் படங்களின் வருகைக்கு வித்திட்டவர்கள் அண்ணாவும் கலைஞருமேயாவர்.

1952 முதலாவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் தி.மு.க வேட்பாளர் திருக்குறள் முனிசாமி பணமும் புகழும் படைத்த காங்கிரஸ் வேட்பாளர் இராம்நாத் கோயங்கா இத்தேர்தலில் கலைஞர் முனிசாமிக்காக முழக்கமிட்டார் பெரும் புகழ் படைத்த கோயங்கா ஒருலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் போனார். பொறுப்போடும் பொறுமையோடும் பொது வாழ்வில் ஈடுபட்ட கலைஞர் 1953 இல் கலைஞர் பட்டம் பெற்றார். டால்மியா புரத்தைக் கல்லக்குடியாக மாற்ற வேண்டுமென்று தி.மு.க. தீர்மானித்தது கல்லக்குடிப் போராட்டத்தில், விசிலடித்து வீறாப்புடன் வந்த புகையிரதத்தின் முன் சென்று தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்திருந்தார் இதனால் கலைஞரும் நண்பர்களும் கைது செய்யப்பட்டனர். அடுத்தடுத்த தொண்டர்கள் தலைவைத்துப் படுத்தனர். துப்பாக்கி ரவைகள் பாய்ந்தன. அந்த இடத்தில் லால்குடி நடராசன் பிணமானார். அடுத்துப் பலியானவன் கேசவன். கைது செய்யப்பட்ட கலைஞர் 6 மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

### குளித்தலையில் வெற்றி

1956 இல் தி.மு.க பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் கலைஞர். தமிழக சட்டசபை தேர்தல 1957இல் நடந்தபோது குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்ட கலைஞர் பெருவெற்றி பெற்றார். அன்று வென்ற கலைஞர் அதன் பின் நடந்த அனைத்துச் சட்ட சபைத் தேர்தல்களிலும் வெற்றித் திருமகனாகத் திகழ்கின்றார்.

1959 இல் சென்னை மாநகராட்சியை தி.மு.க கைப்பற்ற முழுமூச்சாக உழைத்தவர் கலைஞர். இத்தேர்தலில் தி.மு கழகம வெற்றிபெற்றது. கலைஞரின் அயராத உழைப்பைக்கண்ட அண்ணா தங்கமோதிரமொன்றை அவருக்கு அணிந்தார்.

1962இல் மூன்றாவதுசட்டமன்றத் தேர்தல் நடந்தது. 1957 இல் தி.மு.க சார்பில் வெற்றி பெற்ற15சட்டமன்ற உறுப்பினர்களில் கலைஞர் ஒருவரே மூன்றாவது தேர்தலில் வெற்றி பெற முடிந்தது. புதியவர்கள் 50 பேர் சட்டமன்றம் வந்தனர் விலைவாசி எதிர்ப்பு மறியலில் கலைஞர் ஈடுபட்டார் வேலூரில்கலைஞர் கருணாநிதியும். திருச்சியில் அண்ணாவும் சிறைவைக்கப்பட்டனர்.

### பல திட்டங்கள்

இந்தியை எதிர்த்து 1963ல் கலைஞர் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. 1967 தேர்தலில் பத்துஇலட்சம் நிதி திரட்ட தி.மு.க. முடிவு செய்தது. இத்திட்டத்தை முன்மொழிந்த கலைஞர் 11இலட்சத்தைத்திரட்டி தி.மு.க வினரின் பாராட்டைப் பெற்றார். இத்தேர்தலில் அண்ணா முதலமைச்சரானார். கலைஞர் பொதுப் பணித்துறை அமைச்சரானார்

### புத்தொளி

தமிழகத்தில் 6.3.67 ல் தி.மு.க. ஆட்சி முதன் முதல் ஏற்பட்டது.

தமிழ் நாடு எனப் பெயர் வைத்தல்-இரு மொழித் திட்டத்தின் மூலம் இந்திஒழிப்பு-கண்டோர் வியந்த உலகத் தமிழ்நாடு - சுயமரியாதைத் திருமணச் சட்டம் அக்கால தி.மு.க அரசின் சாதனைகளாகும். புற்றுநோயால் பீடிக்கப்பட்ட அண்ணா அமரத்துவமடைந்தார். கலைஞர் தனதுநெஞ்சத்து வேதனையை விபரிக்க முடியாது வெதும்பினார். 'உங்கள் இதயத்தை இரவலாகத் தந்திடு அண்ணா நான் திரும்பிவரும் போது கொண்டுவந்து தருவேன் அண்ணா' எனக்கவிதாஞ்சலி செய்தார்.

### முதலமைச்சர்

அண்ணா மறைவால் கலைஞர் முதலமைச்சரானார் மத்திய அரசு அண்ணா அமெரிக்கா சென்று சிகிச்சை பெற பண உதவி செய்தது. அவர் மறைவுக்குப் பின்னர் மத்திய அரசு அண்ணாவுக்குச் செலவிட்ட பணம் 1,33,52 ஆயிரத்தையும்மக்களிடம்சேர்த்து மத்திய அரசிற்குக் கொடுத்தார்.

1971 ல் தி.மு கழகம்சட்டமன்றத் தேர்தலில் 180இடங்களில் வெற்றி பெற்றது கலைஞர் மீண்டும் முதலமைச்சரானார். அண்ணாவின் துணைவியாரை மேலவை உறுப்பினராக்கினார். தி.மு. கழகசார்பில் அண்ணாவின் குடும்பத்திற்கு 3 இலட்சம் நிதிதிரட்டி வழங்கினார் கலைஞர்ஆட்சியில் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன பேருந்துகள் பள்ளிக்கூடங்களில் வள்ளுவர்படம் வள்ளுவர் திருக்குறள் விளங்கச் செய்தார். ஆகாஷ் வாணி வானொலியாகியது தமிழ்ச் சான்றோர்களுக்கு நினைவுச் சின்னங்கள், சிலைகள், கோட்டங்கள் பி.யூ.ஸி வரை இலவசக் கல்வி, ஏழைகளுக்கு மாற்றுவாரியத் திட்டம்; திருவள்ளுவர், முகமது நபி மேதினம் விடுமுறையாக்கப்பட்டமை, காங்கிரஸ்தியாகிகளுக்கு உதவித் தொகை அண்ணா பிறந்த நாளில்காவலருக்கு தங்கப் பதக்கம் ஆசிரியர்களுக்கு நிவாரணம். விதவைகளுக்கு மறுவாழ்வுத்திட்டம், கண்ணொளித்திட்டம். பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் இவ்வாறாகப் பல திட்டங்களை கலைஞர் அறிமுகப்படுத்தினார்.

### வெளிநாடுகள் அழைப்பு

காலமெல்லாம் கதைசொல்லும் கரிகாற் சோழன் கல்லணைக்கு 43 இலட்சம் வழங்கி மகிழ்ந்தார் கலைஞர். தன் பிறந்த நாள் பரிசுத்தொகை கொண்டு அண்ணாவின்பெயரால் அறக்கட்டளை நிறுவினார். கட்டப் பொம்மனுக்கு நினைவுக் கோட்டம் பூம்புகார் நகர் நிர்மாணம், வள்ளுவர் கோட்டம் அனைத்துமே கலைஞரின்கைவண்ணங்களாகும்.

கலைஞர் அயல் நாடுகளுக்கும் அழைக்கப்பட்டார். றோமாபுரி, சுவிட்ஸர்லாந்து, பாரிஸ், லண்டன் முதலிய நாடுகளுக்கும் சென்று வந்தார்.

1980 ல் தி.மு.க. எதிர்க்கட்சியில் அமர்ந்தது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக விளங்கினார். கலைஞர் 60ற்கு மேற்பட்ட அருந்தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். நெஞ்சுக்கு நீதி அவரது கதையைச் சொல்லும் நூலாகத் திகழ்கின்றது.

கலைஞர் தான் பிறந்த திருக்குவளை இல்லத்தை நூலகமாகவும் படிப்பகமாகவும் மாற்றிஅமைத்துள்ளார்.

'தி.மு. கழகம் அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அடுத்த தலைமுறையைப் பற்றி யோசிக்கின்றது' என்பது கலைஞர் சிந்தனை முத்தாகும். □

## திவ்வியன் கைதுசெய்யப்பட்டமை பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் கைதைஅடுத்து சமூகத்தில் குழப்பம் உருவாகக் கூடியசூழ்நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பாக நாட்டின் தலைமைப் பீடத்திற்குழப்பம் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் சட்டத்தின் ஆட்சியும் மனித உரிமைகளும் எவ்வளவு தூரம் பேணப்படும் என்பதுசந்தேகமாகவேஉள்ளது

இவ்வாறுயாழ்மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டோர்தடுப்புக் காவலில் வைக்கப்பட்டோர் ஆகியோரின் நீதிவிசாரணைத் தீர்ப்புக்களை நோக்கும் போது கைதுசெய்யப்பட்ட மாணவனின் அடிப்படை மனிதஉரிமைகள் எவ்வளவு தூரம் மதிக்கப்படும் என்பது பற்றி மனதில்அச்சம் எழுகின்றது.

இந்தப் பிரச்சினை கட்டு மீறியவிளைவுகளை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் முறையில் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று சம்மந்தப் பட்டவர்களை கோரிநிற்கின்றோம். (வ-5)

## திவ்வியனின் கைது குழப்பத்தை ஏற்படுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகமாணவன் கி. திவ்வியனின் கைதை அடுத்து பல்கலைக்கழகமாணவர்கள் மத்தியில் பலத்தகுழப்பம் ஏற்படுத்தியுள்ளதுடன் யாழ் மாவட்டத்தின்பல்வேறு மட்டங்களிலும் பரவிமேலும் விரிவடைந்து அமைதியின்மையை ஏற்படக் கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம்.

இச் சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டுமென்பதை சம்மந்தப் பட்டவர்களிடம் கண்டிப்பாகக் கோரி நிற்கின்றோம். இவ்வாறு யாழ் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. மாணவனின் கைது விடயத்தில் மனித உரிமைகள் மீறப்படாமலும் மாணவனின் கல்விஎந்தவகையிலும் பாதிக்கப்படாமலும் சுமூகமான ஓர் முடிவை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒத்துழைப்பு வழங்கும்படிவேண்டுகிறோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(வ- 5)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் தொடரும்
# மாணவன் திவ்வியன் விடுதலைபெற
# பொதுமக்கள் உதவ வேண்டும்

## மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்ட போதெல்லாம் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் அதற்கெதிராகக் குரல் கொடுத்து வந்துள்ளனர். அதனை நசுக்கு வதற்கு ஸ்ரீலங்கா இராணுவம் பல வழி முறைகளைக் கையாண்டு வருகின்றது. அதில் ஒன்று தான் மாணவன் திவ்வியனின் கைது.**

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நேற்று இரவு விடுத்த விரிவாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின் சுருக்கம் வருமாறு-

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக யாழ். பல்கலைக்கழகம் குரல் கொடுத்து வருகின்றது. அவ்வாறான விடயங்களில் ஈடுபட்ட மேலும் பல மாணவர்கள் டலர் இதற்கு முன்பும் எச்சரிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதும் கைதுசெய்யப்பட்டதும் சில மாணவர்கள் குடாநாட்டின் வெளியே செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமையும் பலரும் அறிந்ததே.

தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவன் திவ்வியன் படையினராலும் ஸ்ரீலங்கா அரசினாலும் தமிழ் மக்களுக்கு இழைக்கபபட்ட கைதுகள், கொலைகள், சித்திரவதைகள், தாக்குதல்கள், பாலியல்வல்லுறவுச் சம்பவங்களை அஞ்சாது அப்பட்டமாக வெளி உலகிற்குத் தெரியப்படுத்துகின்ற பல்கலைக்கழகத்தின் பணியிலே முக்கிய பங்கு வகித்தவர் பளைப்பகுதியிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் மாணவர் போராட்டத்திலும், தமிழ் மக்களிற்காகக் குரல் கொடுத்து அரசினால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்கு எதிரான செயற்பாட்டிலும், பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலைக்கு எதிரான செயற்பாடுகளிலும், யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சஞ்சீவனின் படுகொலைக்கு எதிராகவும், பிந்துனுவெவ முகாமில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராகவும் பல்கலைக்கழகம் மேற்கொண்ட எதிர்ப்புச் செயற்பாடுகளில் மாணவர் ஒன்றியத்தின் சார்பாக முன்னின்று செயற்பட்டவர்.

திவ்வியன் எமது மக்களின் நலனுக்காக குரல் கொடுத்து வந்த காலப்பகுதியில் அதிருப்தியும் கடும் விசனமும் அடைந்த அரச படையினர் பல தடவைகள் அவருக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தது டன் கொலை செய்யவும் முயற்சித்திருந்தன தனது சொந்த வீட்டிற்கு சென்று கொண்டிருந்த சமயம் இரண்டு தடவைகள் இராணுவத்தின் பிஸ்டல் குழுவினரால் படுகொலை செய்ய எத்தனிக்கப்பட்டதாக தனக்கு நம்பிக்கையான பத்திரிகை நிருபர்களிற்கு ஏற்கனவே தெரிவித்திருந்தார். எனத் தற்போது அறியமுடிகிறது. திவ்வியனைக் கொலை செய்ய அல்லது கைது செய்ய நன்கு திட்டமிட்டுப் பின் தொடர்ந்து கொண்டிருந்த அரச படை ஆட்கள் இம் மாதம் இரண்டாம் திகதி மாலை அவர் தனது உறவி

[2-ம் பக்கம் பார்க்க]


**ராஜா**
**யாழ்ப்பாணம்**
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிப்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)


## வவு. வளாக மாணவர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுவிக்கக் கோரியும் மூடப்பட்ட யாழ். பல்கலைக் கழகத்தை திறக்கக்கோரியும் யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாக மாணவர்கள் தொடர்ச்சியான பகிஷ்கரிப்புப்போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளனர்;

இதேவேளை மாணவர்கள் நேற்று தினமும் பகிஷ்கரிப்பு போராட்டத்தில ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)


**பிளாஸ்டிக் தொழில் நுட்பம்**

வீட்டுப் பாவனைப் பொருட்களான லிக்குடைசர், பிளண்டர், Fan செட்டை, T. V. Audio. Set கதவுகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் அனைத்தும் சீரமைத்தும் புதியனவாக வடிவமைத்துப் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:-

Jaffna Technical Institute
266/1 ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவைக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.
(C/ 2196)


## மிதிவெடி அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக வுள்ள பூந்தோட்டத்திலிருந்து மிதிவெடிஒன்று நேற்று மாலை யாழ் உதவி பொலிஸ் உத்தியோகத்தர் எஸ்:ஐ பெனாண்டோ மூலம் அகற்றப்பட்டது. (வ-104]

**ஐந்து...**

விததுளளார்.

பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கவேண்டுமென்பதில் சிந்திக்கவேண்டியுள்ளதுஎன்றுகூறிய பிரதமர் சுயாதீன பொலிஸ் ஆணைக் குழு நியமிப்பதில் ஜே வி பியும் எதிர்ப்பதாகத் தெரிவித்துளளார். (வ)

உள்ளதும் பறிபோகும் அச்சத்தால்

## தேர்தலைச் சந்திக்க ஐ.தே.கட்சிவிரும்பவில்லை

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெற்றாலும் உடனடியாகதேர்தல் ஒன்றை சந்திக்க ஐக்கியதேசியக்கட்சியின் பெரும்பாலான பாராளு மன்றஉறுப்பினர்கள் விரும்பவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக தேர்தல் ஒன்றை சந்தித்தாலும் வெற்றிபெறுவோமா என்ற அச்சத்தில் அனேகபாராளுமன்றஉறுப்பினர்கள் உள்ளதாகவும் இதனால் தேர்தலைச் சந்திப்பதைவிட பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுடன் இணைந்துதேசிய அரசுஒன்றை அமைத்தாலே தற்போதைய நெருக்கடி நிலைக்கு சிறந்தவழியாகுமென ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது (ந-5)

**ஜனாதிபதி---**

இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படாவிட்டால் ஆட்சி கவிழ்வது உறுதியென சில அமைச்சர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ந-5)

**ஜனாதிபதியின்...**

ணணியில் சிரேஷ்ட அமைச்சர், எஸ். பி. திஸநாயக்கா, பிரதி அமைச்சர்கள ஒரு சிலபாராளுமன்றஉறுப்பினர்கள், மற்றும் எதிரணியைச் சேர்ந்த உறுப்பினர்களும் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுவதையும் அரசியல்நெருக்கடிநிலைநீடிப்பதையும்தாம் விரும்பவில்லை யென ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்தனர்.

இதுவ்வாறு இருக்கசர்வஜனவாக்கெடுப்பு மூலம்புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான மக்களின் ஆணையை பெறுவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட முடிவு பொருத்தமானதென கொழும்பில் உள்ளசிரேஷ்ட எதிரணி அரசில்வாதிஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த அதிரடி அறிவிப்பு ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்விடுதலைக் கூட்டணி ரெலோ, ஜே.வி.பி மற்றும் சிங்கள பேரினவாதிகளுக்கும் பலத்தஅடியைக் கொடுத்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதேவேளை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் போது பலகோடிக்கணக்கான ரூபாக்களை சம்பாதிக்கலாம்என்று கனவுகண்ட எம்பிக்களின் கனவு பகற்கனவாக முடிந்துவிட்டதென பெயர் குறிப்பிடவிரும்பாத சிரேஷ்ட அரசியல் வாதிஒருவர் தெரிவித்துள்ளார். (வ)

**ஒருவர்...**

விடுதலை செய்யப்பட்ட ஞ.ரவிசங்கரை காங்கேசன் துறை கடற்படைத்தளத்தில் கடமை புரியும்லெ.கொமான்டோ சுரவீர மூலம் இந்தியாவுக்கு அனுப்பிவைக்குமாறு யாழ் மாவட்ட நீதிபதி இ.த விக்கினராசா உத்தரவிட்டுள்ளார் (வ)

**இலங்கை**

தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரதம படைத்தளபதி ஒருவர் இலங்கை இராணுவத்திற்கு இராணுவ உதவிகள வழங்கப்படும் என்று பகிரங்கமாகக் கூறியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

கொழும்பில் நேற்றுமாலை செய்தியாளர்கள் மகாநாடு ஒன்று நடைபெற்ற போது அம்மகாநாட்டிலேயே அமெரிக்கபடைத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அமெரிக்க விமானப் படையின் போயிங் 707 விமானத்தில் கொழும்பு வந்திருந்த அவர் செய்தியாளர்மகாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையின்இறைமைபாதுகாக்கப் படவேண்டுமென்பதில் அமெரிக்கா உறுதியாகவுள்ளது இலங்கையில் இடம்பெற்று வரும் பிரிவினைப் போருக்கு நாம் ஒரு போதும் ஒத்துழைக்க மாட்டோம்;

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வே அவசியமானதாக இருந்த போதும் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் இராணுவ நடவடிக்கைகள் சமாதானமுறைகளுக்குத் தடையாக அமைய மாட்டாது என்றும் தெரிவித்தார். [வ]


உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள தங்க - வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்....

**நியூ நகுலா ஜுவல்லறி**

**74, கஸ்தூரியார் வீதி, --- யாழ்ப்பாணம்.**

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்,

[கி/2195]

**நகுலாநகை மாடம்**
24 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "வலம்புரி" அச்சக ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள [illegible] அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலைமாதம் 11 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.